1971 ஜூலை 22]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is there any proposal to start a hostel for working women belonging to Scheduled Castes and Backward Classes?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண்கள் அந்த அளவுக்கு முன்னேற வில்லை. பிறகு பார்க்கலாம்.

திரு. ந. முத்துவேல் : தலைவரவர்களே, இந்த ஆண்டு எத்தனை மாணவர்கள் விடுதிகள் அரசால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏறத்தாழ 25 புதிய விடுதிகள் அமைக்க அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறது.

Separate Cell for Idol theft cases

* 363 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to create a separate cell for idol theft cases; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுவாக தமிழ் நாட்டிலே, அதுவும் சென்னை நகரத்திலே தான் அதிக சிலைகளைத் திருடிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி திருடுகிறவர்கள் சாமி சிலைகளை திருடி இன்னொரு இடத்தில் வைத்தால் தான் மகிமை உண்டு என்று இப்படி செய்கிறார்கள். அது உண்மையா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, சிலையைத் திருடி இன்னொரு இடத்தில் பதித்தால் தான் மகிமை என்று ஒரு சில பக்தர்கள் இடத்தில் எண்ணம் இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் இங்கே கூறப்பட்ட சிலை திருட்டுக்கான காரணம் அப்படி அல்ல. வெளி நாட்டவர்கள் தமிழ் நாட்டு சிலைகளின் கலை நுணுக்கங்களில் ஆர்வம் கொண்டு அதை அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள் என்ற அடிப்படையில் அந்த சிலைகள் திருடப் படுகின்றன. அதிலும் குறிப்பாக உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் அது சென்னை மாவட்டத்திலே அல்ல, தஞ்சை மாவட்டத்திலே தான் சிலைகள் அதிகமாக திருடப்படுகின்றன.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, வெளி நாட்டிலே உள்ளவர்கள் சிலையின்மீது பற்றுக் கொண்டுள்ளதால் திருடுகிறார் கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய

மகாபலிபுரத்திலே அழகிய சிலைகளை நமது அரசாங்கமே தயாரித்து வருகிறதே, அத்தகைய சிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் சிலையின் மீது மோகம் கொண்டு திருடவில்லை. அந்த சிலை வடிக்கப்பட்ட காலத்தின் மீது அவர்கள் கொண்டு இருக்கிற அந்தப் பற்றின் காரணமாகத்தான் அவர்கள் அந்தச் சிலைகளை வாங்கிக் கொள்கிறார்கள். மகாபலிபுரத்தில் தயாரிக்கப்படும் சிலைகள் எல்லாம் அண்மைக் காலத்தவை. ஆகவே. அவைகளை வெளிநாட்டார் அவ்வளவு விரும்பி வரவேற்கமாட்டார்கள்.

திரு. சொ. காவேரிமணியம் : துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் தென் மாவட்டங்களில் தான் விலை உயர்ந்த சிலைத் திருடு அதிகமாக ஏற்படுகிறது. இவைகளைத் தடுக்கும் பொருட்டு ஒரு தனிக் காவல் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே அந்த சிலை திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக மாநில அளவில் தனியாக ஒரு காவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அது பணியாற்றி வருகிறது. எந்த மாவட்டத்தில் அதிகமாகச் சிலை திருடப்படுகிறது என்பதைப் பரிசீலித்து அதற்குத் தக்கபடி அதைத் தடுக்க முயற்சி எடுக்கலாம்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இதுவரையில் எத்தனை சிலை திருடிய வழக்குகளை நம் அரசாங்கம் பதிவு செய்து இருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1968-ம் ஆண்டில் 79 வழக்குகளும், 1969-ம் ஆண்டில் 63 வழக்குகளும், 1970-ம் ஆண்டில் 112 வழக்குகளும், 1971-ல் இது வரையில் 36 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பிள்ளையார் சிலையைத் திருடி வைத்தால் தான் மகிமை என்ற காரணத்தால் மாம்பலத்திலும் பிள்ளையார் சிலை திருடி வைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாம்பலத்து சிலையைப் பற்றி இந்த மன்றத்திலே வெகு விரிவாகப் பேசப்பட்டு இருக்கிறது. மீண்டும் அதைக் கிளர வேண்டிய அவசியம் இல்லை.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இப்படிச் சிலைகள் நிறைய திருடுபோய் இருக்கின்றனவே, இந்தச் சிலைகளில் ஆண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா பெண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் இந்த பால் வேறுபாடு பார்த்துச் சிலைகளைத் திருடிக்கொண்டு இருப்பது இல்லை. ஏனென்றால் அந்தச் சிலையிலே உள்ள கலை நுட்பங்களைத்தான்

1971 ஜூலை 22]

அவர்கள் வெகுவாக ரசிக்கிறார்கள். திருடுபவர்கள் அதை ரசிப்பது இல்லை. திருடுபவர்கள் விலையை ரசிக்கிறார்கள். வெளி நாட்டவர்கள் அதன் கலையை ரசிக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்த சிலைகளைத் திருடுபவர்கள் குறைவாக இருந்தாலும், இதற்கென்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிக்கச் செல்வாக்குப் படைத்தவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது புதிய தகவல். மீதமுள்ள தகவல்களையும் தெரிவிக்க வேண்டுகிறேன். (சிரிப்பு)

திருமதி த. ந. அனந்தநாயகி : புதிய தகவல் இல்லை ; மீதமுள்ள தகவல்களை அரசாங்கம் தன் சிப்பந்திகளைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று தான் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கம் தனி அதிகாரிகளை மட்டும் வைத்துச் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்றில்லை : மக்கள் பிரதிநிதிகளுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

திரு. இ. எஸ். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சிலப்பதிகாரத்தை வடித்துக்கொடுத்த இளங்கோவிற்குச் சிலை . . . .

MR. DEPUTY SPEAKER : It is not a relevant question.

மு.ப. 10-00

திரு. கே. டி. கே. தங்கமணி : இது வரையில் 290 சிலைகள் திருட்டு இந்த நாலு ஆண்டுக்காலத்தில் பிடிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்படிச் சிலைகளைத் திருடுபவர்கள் கூட்டமாக இருக்கிறார்களா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் கூட்டமாக இல்லாவிட்டாலும், ஒருவருக்கொருவர் தொடர்புள்ளவர்களாக சங்கிலிபோல் தொடர்புகொண்டு காரியங்கள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படும் சிலைகளை வெளிநாட்டில் வைத்துக்கொள்ளாமல், திரும்பவும் இந்தியாவுக்கே பெறவேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டு, குறிப்பாக, தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை காரணமாக, அண்மையில் பாரிசில் நடந்த ஐ.ஜி.க்கள் மாநாட்டில், தமிழக ஐ.ஜி. அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இங்கே திருடப்பட்ட, வெளி நாட்டிலுள்ள சிலைகளைப் பற்றி ஆராய மேலும் அகில உலக, 'இண்டர்-போல்' கூட்டம் வருகிற செப்டம்பர் மாதத்தில் நடக்கும்போது, அது பரிசீலிக்கப்பட இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Was there any instance of policeman stealing idols?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போலீஸ்காரர்கள் திருடுகிறார்கள்; சில போலி பக்தர்களும் திருடுகிறார்கள்.